# கன்னிமரி பாலகனே

கன்னிமரி பாலகனே
குடிலில் பிறந்த மன்னவனே
பொன்னும் இல்லை பொருளும் இல்லை
உனக்கு நான் தர
சின்ன இதயம் ஒன்றை உனக்கு
உவந்து நான் தர - ( 2 )

**1**
ஏழை தந்த கண்ணீரும்
அடிமை தந்த அவலமும்
அன்புடனே உவந்து தருகின்றோம்
இந்த நிலை மாறிட குடிலில் பிறந்தார்(2)
கண்ணான கண்மணியே விடியல்தந்து
என்னை ஏற்றிடு

(கன்னிமரி)

**2**
உழைத்து உடைந்த உள்ளமும்
உருக்குலைந்த உதிரமும்
பலியாக உமக்கு தருகின்றேன்
இந்த நிலை மாறிட மனிதனாகினாய் (2)
வழிகாட்டும் முழு நிலவே எம்மை
உமது பலியாய் மாற்றிடு

(கன்னிமரி)